ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ கண்ணும் சுழன்று ॥

*This document* [*] *has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

[*] This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கண்ணும் சுழன்று ॥

## திருநறையூர் - 1

‡கண்ணும் சுழன்று பீளையோடு⋆ ஈளை வந்தேங்கினால்⋆
 பண்ணின் மொழியார்⋆ பைய நடமின் என்னாதமுன்⋆
விண்ணும் மலையும்⋆ வேதமும் வேள்வியும் ஆயினான்⋆
 நண்ணு நறையூர்⋆ நாம் தொழுதும் எழுநெஞ்சமே (1)

கொங்குண் குழலார்⋆ கூடியிருந்து சிரித்து⋆
 நீரிங்கென் இருமி⋆ எம்பால் வந்ததென்றிகழாதமுன்⋆
திங்களெரி கால்⋆ செஞ்சுடர் ஆயவன் தேசுடை⋆
 நங்கள் நறையூர்⋆ நாம் தொழுதும் எழுநெஞ்சமே (2)

கொங்கார் குழலார்⋆ கூடியிருந்து சிரித்து⋆ எம்மை
 எங்கோலம் ஐயா!⋆ என் இனிக் காண்பதென்னாதமுன்⋆
செங்கோல் வலவன்⋆ தாள் பணிந்தேத்தித் திகழும் ஊர்⋆
 நங்கோன் நறையூர்⋆ நாம் தொழுதும் எழுநெஞ்சமே (3)

கொம்பும் அரவமும்⋆ வல்லியும் வென்ற நுண்ணேர் இடை⋆
 வம்புண் குழலார்⋆ வாசல் அடைத்திகழாதமுன்⋆
செம் பொன் கமுகினம் தான்⋆ கனியும் செழும் சோலை சூழ்⋆
 நம்பன் நறையூர்⋆ நாம் தொழுதும் எழுநெஞ்சமே (4)

விலங்கும் கயலும்⋆ வேலும் ஒண் காவியும் வென்ற கண்⋆
 சலம் கொண்டசொல்லார்⋆ தாங்கள் சிரித்திகழாத முன்⋆
மலங்கும் வராலும்⋆ வாளையும் பாய் வயல் சூழ்தரு⋆
 நலங்கொள் நறையூர்⋆ நாம் தொழுதும் எழுநெஞ்சமே (5)

மின்னேர் இடையார்⋆ வேட்கையை மாற்றியிருந்து⋆
 என்நீர் இருமி⋆ எம்பால் வந்ததென்றிகழாத முன்⋆
தொன்னீர் இலங்கை மலங்க⋆ விலங்கெரி ஊட்டினான்⋆
 நன்னீர் நறையூர்⋆ நாம் தொழுதும் எழுநெஞ்சமே (6)

வில்லேர் நுதலார்⋆ வேட்கையை மாற்றிச் சிரித்து⋆ இவன்
    பொல்லான் திரைந்தான் என்னும்⋆ புறனுரை கேட்பதன் முன்⋆
சொல்லார் மறை நான்கோதி⋆ உலகில் நிலாயவர்⋆
    நல்லார் நறையூர்⋆ நாம் தொழுதும் எழுநெஞ்சமே (7)

வாள் ஒண் கண் நல்லார் தாங்கள்⋆ மதனன் என்றார் தம்மை⋆
    கேண்மிண்கள் ஈளையோடு⋆ ஏங்கு கிழவன் என்னாத முன்⋆
வேள்வும் விழவும்⋆ வீதியில் என்றும் அறாதவூர்⋆
    நாளும் நறையூர்⋆ நாம் தொழுதும் எழுநெஞ்சமே (8)

கனி சேர்ந்திலங்கு நல் வாயவர்⋆ காதன்மை விட்டிட⋆
    குனி சேர்ந்துடலம்⋆ கோலில் தளர்ந்திளையாத முன்⋆
பனி சேர் விசும்பில்⋆ பால்மதி கோள் விடுத்தான் இடம்⋆
    நனி சேர் நறையூர்⋆ நாம் தொழுதும் எழுநெஞ்சமே (9)

‡பிறை சேர் நுதலார்⋆ பேணுதல் நம்மை இலாதமுன்⋆
    நறை சேர் பொழில் சூழ்⋆ நறையூர் தொழு நெஞ்சமே! என்ற⋆
கறையார் நெடுவேல் மங்கையர் கோன்⋆ கலிகன்றி சொல்⋆
    மறவாதுரைப்பவர்⋆ வானவர்க்கின் அரசாவாரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥